## "கர்ள்அல்-ஹஸன் ஐ அமுல்படுத்துவதில் சம்மாந்துறைப் பிரதேச இஸ்லாமிய நிதிநிறுவனங்களின் பங்களிப்பு"

**Supervisor**
*Dr. S. M. M. Nafees*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Mr. ULM. Siyath*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

சர்வதேச மற்றும் தேசிய ரீதியான நிதியியல் நடவடிக்கைகளுக்கு நிதி நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமான ஒன்றாகியுள்ளது. இன்றைய உலகில் பல்வேறு நாடுகளில் வறுமைக்கெதிராகப் போராடுதல், புதிய தொழில்களை உருவாக்குதல் மற்றும் மக்களின் பொருளாதார தேவைகளை நிறைவு செய்தல் போன்ற பல நிதியியல் செற்பாடுகளுக்கு நிதிநிறுவனங்கள் பல வழிகளில் பங்களிப்பு செய்து வருகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கும் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் ஆணிவேராய் காணப்படும் வங்கிகளும், உள்ளூர் மக்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார தேவையை நிறைவு செய்வதில் பாரிய பங்களிப்பை செய்யும் நிதிநிறுவனங்களும் வட்டியை மையப்படுத்தி செயற்படுத்துவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே இஸ்லாமிய பொருளாதாரத்தில் இதற்கான மாற்று திட்டங்கள் யாது என்று நோக்கும் போது வட்டியற்ற கடன் திட்டமும் ஒன்றாக நோக்கப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கங்களாக நடைமுறையில் உள்ள கடன்முறைகளையும் இஸ்லாமிய கடன்முறையையும் அறிந்து கொள்ளல், கர்ள்அல்-ஹஸன் நிதிமுறைக்கும் இஸ்லாமிய நிதிநிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பை அறிதல், கர்ள்அல்-ஹஸன் அமுலாக்கத்தில் நிறுவன ரீதியான கட்டமைப்பின் அவசியத் தன்மையை சுட்டிக்காட்டல், கர்ள் அல்-ஹஸன் அமுலாக்கத்தில் இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிந்து எதிர்காலத்தில் வெற்றிகரமாக செயற்படுவதற்கான பரிந்துரைகளை வழங்குவதுமாகும்.

முதலாம் நிலைத்தரவுகள் இஸ்லாமிய நிதிநிறுவனங்களின் முகாமையாளர்கள், ஊழியர்களிடம் நேர்காணலை மேற்கொள்ளல் மற்றும் நிதிநிறுவனங்களின் பயனாளர்களில் 100பேர் எழுமாறாக தெரிவுசெய்பட்டு அவர்களிடம் வினாக்கொத்து வழங்குவதன் மூலமும் தரவுகள் திரட்டப்படவுள்ளன. மேலும் இரண்டாம் நிலைத்தரவுகள் நிதி நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள், நிதிக்கூற்றுக்கள், நிதி நிறுவனங்களுடன் தொடர்பான வெளியீடுகள், நூற்கள், பருவகால இதழ்கள் மற்றும் இணையத்தளங்கள் மூலமும் பெறப்படவுள்ளன. சேகரிக்கப்படும் தரவுகள் தேவைக்கேற்ப MS Excel-2007 மென்பொருளினூடாக பகுப்பாய்வுக்குட்படுத்தப்படவுள்ளன.

இவ்வாய்வில் மேற்கொள்ளப்படவுள்ள கருதுகோள் பரிசோதனைக்கேற்ப இஸ்லாமிய நிதிநிறுவனங்கள் கர்ள்அல்-ஹஸன் ஐ அமுல்படுத்துவதில் அந்நிதிநிறுவனங்களின் வாடிக்கையாளர் வைப்பு, வாடிக்கையாளர் கடன் மீளளிப்பு வீதம், வாடிக்கையாளர் மீதுள்ள நம்பிக்கை, ஏனைய வருமானங்கள் தாக்கம் செலுத்துகின்றன என்பது முடிவாக முன்வைக்கப்படவுள்ளது. அத்துடன் இஸ்லாமிய வங்கி என்ற வகையில் அமானாவுக்கு கரள்அல்-ஹஸனை அமுல்படுத்துவதில் மத்திய வங்கியின் சில சட்ட விதிகள் தடையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.